சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2026.
OS.No.20/2022
DW1 : முருகானந்தம் (வயது 48 ) த/பெ. தங்கையன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு கு.வி</u>

எனது முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விவரங்களை நான் தான் கூறினேன். தாவா சொத்தாக எந்த சர்வே எண் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.216 ஆகும். சர்வே எண். 216 க்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். ச.எண்.216 எனக்கோ, எனது மூதாதையருக்கோ பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

என்ன பத்திரம் என்றால் பாக பத்திரம், எங்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம். எங்கள் குடும்பத்தினர் 5 நபர்கள் பெயர்கள் சுசிலா, கருப்புடையார், வீரம்மாள், அம்சவள்ளி மற்றும் முருகானந்தம் என்கிற நான். யார் யாருக்கு எந்த சொத்து பிரிந்தது என்றால் ச.எண்.216 ல் 4 ஏக்கர் 68 சென்ட் சொத்தை சுசிலாவிற்கு மற்ற நான்கு நபர்கள் பாக பாத்திய விடுதலை கொடுத்தோம்.

பாக பத்திரம் ஏற்பட்ட தேதி 19.01.2022 ஆகும். விடுதலை பத்திரம் ஏற்பட்ட தேதி 05.01.1980 ஆகும். தாவா சொத்து குறித்து பாக விடுதலை பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது என்ன ஆவணம் என்றால் பட்டா உள்ளது. 1980 க்கு முன்பு ஆதியில் யார் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இருந்தது என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்தது.

அதனை காண்பிக்க பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன பட்டாவை என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஆதியில் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியமாக இருந்தது என்பதை காட்டும் வகையில் எனது

தகப்பனார் பெயரில் உள்ள பட்டா ஆவணத்தை எனது தரப்பில் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ச.எண்.216 ன் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 68 சென்ட் ஆகும். அந்த விஸ்தீரணத்தை காட்டக்கூடிய வருவாய்துறை ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் வருவாய் ஆவணம் உள்ளது.

நானும் வாதி குடும்பத்தாரும் ரத்த உறவு முறையானவர்கள். என்ன உறவு என்றால் அருணாச்சல உடையாரும், முத்துசாமி உடையாரும் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள். அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதை காட்டுவதற்கான ஏதேனும் ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் ஆவணம் உள்ளது.

நான் கூறுவதுபோல், மேற்சொன்ன இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் இல்லை என்று கூறினால் சரியல்ல. நானும் வாதி குடும்பத்தாரும் எந்தவித ரத்த உறவு சம்மந்தமும் இல்லாதவர்கள் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூல 2 வது பக்கத்தில் 6 வது பாராவில் கூறியுள்ளபடி தாவா சொத்து 215, 216 ல் உள்ளடக்கியது என்பது சரிதானா என்றால் சரிதான்.

தாவா வழக்கு பிராதில் சர்வே எண்.215 ஐ சொத்து விவரத்தில் வாதி காட்டியுள்ளாரா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. தாவா வழக்கு சர்வே எண்.216 க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.215 யும் உள்ளடக்கியது என்று நான் கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

தாவா பிராதில் சர்வே எண்.215 ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ச.எண்.216 க்கு தான் பரிகாரம் கேட்டுள்ளார். சர்வே எண்.215 க்கு பரிகாரம் கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

சர்வே எண்.216 ல் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால், சர்வே எண்.216 வாதிக்குரியது என்று தவறாக பரிகாரம் கேட்டுள்ளார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2 வது பக்கம் 6 வது பாராவில் கூறியுள்ள படி சர்வே

எண்.215 மற்றும் 216 சொத்துக்களை வாய்கராறாக பிரிவினை செய்து கொண்டதாக கூறுவது தவறானது என்றும் எந்த உறவு முறையும் இல்லாமல் அவ்வாறு வாய்மொழியாக சொத்தினை பிரிவினை செய்ய முடியாது என்றால் சரியல்ல. அதற்கான ஆதாரம் உள்ளது கடந்த 05.01.1980 ல் எனது தகப்பனார் தங்கையனும் மற்றும் மணிவேல், அவரது அம்மாவும் சேர்ந்து பாகபாத்திய விடுதலை ஆவணம் சர்வேஎண்.216 ஐ பொறுத்து பாக பாத்திய விடுதலை பத்திரமும், சர்வே எண்.215 ஐ பொறுத்து கிரய பத்திரமும் ஆக இரண்டு ஆவணங்களை ஒரே தேதியில் எழுதி கொண்டுள்ளார்கள்.

சர்வே எண்.216 ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பாக பாத்திய விடுதலை ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் 1 ஏக்கர் 12 சென்ட்டிற்கு ஏற்பட்டுள்ளது. சர்வே எண்.215 ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரய ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் 3 ஏக்கர் 56 சென்டிற்கு ஏற்பட்டுள்ளது.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/

முருகானந்தம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி